# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் – 48

# சபை சரித்திரம்



# Church History

Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

## சபை சரித்திரம் Church History




கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே,

இன்று நாம் சபை சரித்திரம் குறித்த பாடத்தைக் காண்போம். தேவன் சபையில் நேரிடவிருக்கும் சம்பவங்களை முன்னறிந்து, அதை இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப்பின்பு வெளிப்படுத்தினார். ஆம். பிதாவாகிய தேவன் எந்த ஒரு காரியத்தின் ஆரம்பத்தையும் முடிவையும் அறிந்தவர்

"அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற்கொண்டும், இன்னும் செய்யப்படாதவைகளை பூர்வகால முதற்கொண்டும் அறிவிக்கிறேன் ( **ஏசாயா46:10** )

பிதாவாகிய தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புவித்தார். அவர் தம் தூதனைக்கொண்டு தம் சரீரமாகிய சபைக்கு வெளிப்படுத்தினார். இவைகளைக் குறித்து பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

**வெளிப்படுத்தல் 1:1**

***"சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவைகளை தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம்"***

வெளிப்படுத்தின விசேஷ புத்தகமானது அடையாளங்களில் எழுதப்பட்டு, சபையின் சரித்திரம் பெருமளவில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அவை யோவானுக்கு அடையாளங்களின்மூலம் வெளிப்படுத்தின புத்தகமாகும். சபையானது பரலோக இராஜ்யம் என்று மத்தேயு சுவிசேஷத்தில் கூறப்பட்டுள்ளது. மேலும், அதன் ஆரம்பக்கால சரித்திரமும் இதில் கொடுக்கப்பட்டுள்ளதை வாசிக்கிறோம் -

**மத்தேயு 13:24**

***"பரலோகஇராஜ்யம் தன் நிலத்தில் நல்லவிதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது"***

உவமை பாஷையில் எழுதப்பட்டிருக்கும் இந்த மத்தேயு 13ம்அதிகாரத்தில் மொத்தம் 7 உவமைகளிலும் சபையானது “பரலோக இராஜ்யம்” என்று குறிப்பிடப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

இது தேவனுடைய இராஜ்யத்தின் ஆவிக்குரிய பாகத்தில், “இராஜாக்களும் ஆசாரியர்களுமாக” நியமிக்கப்படுவதற்கான “அழைப்பை” பெற்று மாம்சத்திலிருக்கும் சபையைக் குறிக்கிற வசனமாகும்( **வெளிப்படுத்தல் 1:6** ).

தேவனுடைய இராஜ்யத்தில் இயேசுகிறிஸ்துவின் தலைமைக்கு உட்பட்ட “புதிய வானமாக” இவர்கள் இருப்பார்கள். இந்த ராஜ்யம் ...

**“ஒரு மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது”** - சபைக்கு தலையானவரும், அதை நிறுவினவருமான நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையும், சபையாவதற்கான அழைப்பை அவர் துவங்கி வைத்ததையும் குறிக்கிறது.

**“நல்ல விதையை விதைத்த..”** - இது தேவனுடைய வார்த்தையாகிய இராஜ்யத்தின் சுவிசேஷத்தை இயேசு விதைத்ததை குறிக்கிறது(**லூக்கா 8:11**)

**“தன் நிலத்தில்”** - நிலம் என்பது இவ்வுவமையில் உலகத்தைக் குறிக்கிற அடையாளம் என்பதை மத்தேயு 13:38 கூறுகிறது. இது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம் 12 அப்போஸ்தலர்கள் மற்றும் சில சீஷர்களைக்கொண்டு சபை நிறுவப்பட்டதைக் குறிக்கிறது.

இந்த சபையானது படிப்படியாக வளர்ந்து, கிட்டத்தட்ட2000 வருடங்கள் சரித்திரத்தை உடையதாக இருக்கும்.

இந்த சபையின் சரித்திரம் நம் கர்த்தராகிய இயேசுவின் மூலம் தீர்க்கதரிசனமாக வெளிப்படுத்தப்பட்டு, இரண்டு புத்தகங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

*1. வெளிப்படுத்தின விசேஷம்*

*2. மத்தேயு சுவிசேஷம்*

இப்பொழுது பின்வரும் வசனப்பகுதியை வாசித்து துவங்குவோம் -

**வெளிப்படுத்தல் 1:12,13,16**

***“..திரும்பினபோது ஏழு பொன் குத்துவிளக்குகளையும், அந்த ஏழு குத்துவிளக்குகளின் மத்தியிலே நிலையங்கி தரித்து, மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த மனுஷகுமாரனுக்கொப்பானவரையும் கண்டேன்.. தன் வலதுகரத்திலே ஏழு நட்சத்திரங்களை ஏந்திக் கொண்டிருந்தார்”***

இந்த வசனப்பகுதிகளே நம் ஆராய்ச்சிக்குரிய திறவுகோல் ஆகும்.

**“மனுஷகுமாரனுக்கு ஒப்பானவர்”**- கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக் குறிக்கிறது

**“ஏழுபொன்குத்துவிளக்குகளும், ஏழுநட்சத்திரங்களும்”** - இயேசுவின் கரத்திலிருந்தது

**வெளிப்படுத்தல் 1:20**

***“என் வலதுகரத்தில் நீ கண்ட ஏழு நட்சத்திரங்களின் இரகசியத்தையும், ஏழு பொன் குத்துவிளக்குகளின் இரகசியத்தையும் எழுது. அந்த ஏழு நட்சத்திரங்களும்***

*ஏழு சபைகளின் தூதர்களாம். நீ கண்ட ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகளாம்"*

ஒரு தரிசனத்தில் அப்போஸ்தலனாகிய யோவானுக்கு இயேசு ஏழு சபைகளையும், ஏழு தூதர்களையும் குறித்து பேசுவதைக் காண்கிறோம்.

ஒரு வேளை இயேசுவிற்கு 7 விசேஷமான சபைகள் இருக்கக்கூடுமோ? ஏனெனில் இதுபோல் இன்று 750க்கும் அதிகமான கிறிஸ்தவ பிரிவுகள் சபைகளில் காணப்படுகிறது. இதற்கான பதிலை வசனத்தில் காண்போம் -

**வெளிப்படுத்தல் 1:13**

*"அந்த ஏழு குத்துவிளக்குகளின் மத்தியிலே, நிலையங்கி தரித்து, மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த மனுஷகுமாரனுக்கொப்பானவரையும் கண்டேன்"*

இது பொன்குத்துவிளக்குகள் குறிக்கிற ஏழு சபைகளுக்கு மத்தியிலும் இயேசு இருப்பதை சித்தரிக்கிறது. இங்கு அவைகளுக்கு மத்தியில் என்பது, நம் கர்த்தரின் வார்த்தைகளை அடையாளப்படுத்துவதை வாசிக்கலாம்-

**மத்தேயு 28:20**

*"இதோ, உலகத்தின்(யுகத்தின்) முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்"*

இந்த உலகத்தின் முடிவுபரியந்தம் இந்த ஏழுசபைகளோடு , சுவிசேஷயுகம் முழுவதும் இயேசு இருப்பதை அடையாளப்படுத்துகிறது. இந்த ஏழு சபைகள் என்பது தனித்தனியான ஏழு சபைகளைக் குறிப்பதில்லை, மாறாக சுவிசேஷயுக சபையாகிய ஒரே சபை கடந்து வரும் ஏழு காலப்பிரிவுகளைக் குறிக்கிறது. . இந்த "ஏழு சபைகள்" அல்லது சபையின் ஏழு காலப்பிரிவுகளும், கர்த்தர் மூலம் தனித்தனியாக பெயர்சூட்டப்பட்டிருப்பதை பின்வரும் வசனத்தில் காணலாம் -

**வெளிப்படுத்தல் 1: 11**

*"அது- நான் அல்பாவும் ஒமெகாவும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன். நீ காண்கிறதை ஒரு புஸ்தகத்தில் எழுதி, ஆசியாவிலிருக்கிற எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா என்னும் பட்டணங்களிலுள்ள ஏழு சபைகளுக்கும் அனுப்பு என்று விளம்பினது"*

இந்த வேறுபட்ட காலப்பகுதிகளில் காணப்படும் நிலை மற்றும் சம்பவங்களை கர்த்தர் முன்பே அறிந்தவராக, அந்த சபைகளுக்கு தேவையான எச்சரிப்பு மற்றும் ஊக்கமான அறிவுரைகளை (வெளிப்படுத்தல் 2 மற்றும்3அதிகாரங்களில்) பதிவுசெய்திருக்கிறார்.

இப்பொழுது அந்த சுவிசேஷயுக சபையின் ஏழு காலப்பிரிவுகளை நாம் அடையாளங்காண முயற்சிப்போம். இவைகளின் விபரங்களை வேதம் நமக்கு நேரடியாக தருவதில்லை. ஆனால் இந்த ஏழு சபைகளைக் குறித்து அறிந்துகொள்ள வெளிப்படுத்தல் 2 மற்றும் 3ம் அதிகாரங்களை தியானிப்பதன் மூலம் வேத மாணவர்கள் சில வசனங்களையும் சரித்திர நிகழ்வுகளையும் வைத்து காலங்களைக் குறித்து சில தீர்மானங்களுக்கு வந்திருக்கின்றனர். இப்பொழுது நாம் அந்த ஏழு சபைகளையும் அவைகளின் காலப்பிரிவுகளையும் குறித்து ஒவ்வொன்றாகக் காண்போம் -



## *சபை - 1*
## *சபையின் பெயர் - எபேசு*

**வெளிப்படுத்தல் 2:1**

***"எபேசு சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்"***

இந்த முதலாவது சபைக்கு எபேசு என்று கர்த்தர் பெயரிட்டார். இதன் காலகட்டம் கிபி 33 ம் வருடம் பெந்தெகொஸ்தே நாள் துவக்கி,கிபி 70 இல் எருசலேம் விழுந்தபோது முடிவுற்றது.

**வெளிப்படுத்தல் 8:8**

***"இரண்டாம் தூதன் எக்காளம் ஊதினான். அப்பொழுது அக்கினியால் எரிகிற பெரிய மலைபோன்றதொன்று சமுத்திரத்திலே போடப்பட்டது"***

இது இரண்டாம் எக்காளத்தைக் குறிக்கிறது. எரிகிற பெரிய மலை சமுத்திரத்திலே போடப்பட்டது என்ற இந்த அடையாள பாஷையானது, கிபி 70ல் ரோமர்களுடைய படையெடுப்பின்மூலம் எருசலேம் அழிக்கப்பட்டபோது, இஸ்ரயேல் என்ற பெரிய தேசத்துக்கு வந்த நியாயத்தீர்ப்பை குறிக்கிறது. இந்த காலப்பகுதி அப்போஸ்தலர்கள் உயிரோடிருந்து சபையை வழிநடத்தின காலமாக இருக்கிறது.

**காலப்பகுதி : கிபி 33 முதல் கிபி 70 (37 வருடங்கள் ) வரை.**



## *சபை - 2*
## *சபையின் பெயர் - சிமிர்னா*

**வெளிப்படுத்தல் 2:8**

***"சிமிர்னா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்.."***

இந்த சபை காலப்பகுதியின் துவக்கம் எபேசு சபையின் காலப்பகுதி முடிவுக்கு வந்தபொழுது துவங்கியது. இப்படியிருக்க, இந்த 2ம் சபை எப்பொழுது முடிவுக்கு வந்தது? பின்வரும் வசனத்தின் மூலம் அடையாளம் காணலாம் -

**வெளிப்படுத்தல் 2:10**

***"பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள், ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு.."***

இங்கு தீர்க்கதரிசனத்தில் காணப்படுகிற "பத்துநாட்கள்" என்பது , பத்து வருடங்கள் சபையின்மீது அனுமதிக்கப்படுகிற உபத்திரவத்தைக் குறிக்கிறது.

இது சரித்திரத்தில் கிபி 303 முதல் கிபி 313 வரை உள்ள காலப்பகுதியாகும். இந்த நாட்களில் கான்ஸ்டான்டின் சக்கரவர்த்திக்கு முன்பு ஆட்சியிலிருந்த டையகிலோஷியன் ஆளுகை செய்த நாட்களில், ரோமர்கள் கிறிஸ்தவர்களை கடுமையான உபத்திரவத்துக்கு உள்ளாக்கினர்.

இந்த இந்த பத்துவருட உபத்திரவத்திற்குப் பின்பு கிபி 313ல் முடிவுக்கு வந்ததைக் காண்கிறோம்.

**காலப்பகுதி : கிபி 70 முதல் கிபி 313 (243வருடங்கள்) வரை**



## சபை - 3
## சபைப் பெயர் : பெர்கமு

**வெளிப்படுத்தல் 2:12**

***"பெர்கமு சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில் "***

இந்த சபையின் காலப்பகுதி கிபி 313ல் துவங்கியது. இது எவ்வளவு நாட்கள் நீடித்து முடிவுக்கு வரும் என்பதை பின்வரும் வசனங்கள் மூலம் அடையாளம் காணலாம் -

**வெளிப்படுத்தல் 2:21**

***"அவள் மனந்திரும்பும்படியாய் அவளுக்குத் தவணை கொடுத்தேன்"***

இவ்வசத்திற்கு பொருள் என்ன? வசனம் 20ல் உள்ள வார்த்தைகளை வாசிக்கலாம் -

***"தன்னைத் தீர்க்கதரிசி என்று சொல்லுகிற யேசபேல் என்னும் ஸ்திரீயானவள் என்னுடைய ஊழியக்காரர் வேசித்தனம்பண்ணவும்.."***

இங்கு யேசபேல் என்று அழைக்கப்படுகிற "ஸ்திரீயானவள்" பழைய ஏற்பாட்டின் காலத்தில் தீர்க்கதரிசியாகிய எலியாவின் நாட்களில் ஆளுகை செய்த ஆகாப் இராஜாவின் மனைவியாகிய யேசபேலைக் குறிக்காது. இந்த "யேசபேல்" - மதம் அரசியல் ஆகிய அமைப்புகளின் ஒருங்கிணைப்பை நடைமுறைப்படுத்தினதுன்மார்க்கமான பெயர்சபை அமைப்புகளை குறிக்கும் அடையாளமாகும். இதை பின்வரும் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது -

**வெளிப்படுத்தல் 17 : 5**

***"மேலும் இரகசியம், மகா பாபிலோன், வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் என்னும் நாமம் அவள் நெற்றியில் எழுதியிருந்தது"***

அவள் "மகா பாபிலோன்" என்று அழைக்கப்படுகிறாள். தீர்க்கதரிசியாகிய எலியா - தேவனுடைய உண்மை சபைக்கு நிழலாக இருப்பதுபோல், இந்த யேசபேல் அந்திகிறிஸ்து அமைப்பிற்கு நிழலாக இருக்கிறாள்.

ஆவிக்குரிய காரியங்களில் உண்மையில்லாத பெயர்சபையாகிய பாபிலோன், தன் உண்மை நிலையிலிருந்து மனந்திரும்ப தேவன் அதற்கு தவணைக் காலம் கொடுத்தார். இந்த தவணைக்காலம் (Time) என்பது க்ரோனோஸ்(Chronos- S5550) என்ற ஒரு காலப்பகுதியாகும். வெளிப்படுத்தின புத்தகத்தில் "காலம்" என்ற தீர்க்கதரிசன வார்த்தையானது 360 தீர்க்கதரிசன நாட்களைக் கொண்ட ஒரு தீர்க்கதரிசன வருடத்தைக் குறிக்கும். இது 360 சொல்லர்த்த வருடங்களாகும்.

சீர்திருத்துதல் கிபி 517ம் வருடம் அக்டோபர் 31ம் தேதி துவங்கியது. இந்த வருடத்திலிருந்து முன்னோக்கி 360 வருடங்கள் செல்வோமானால் அந்த வருடம்

**1517 - 360 = கிபி 1157**

கிபி 1157ம் வருடத்திலிருந்து யேசபேல் மனந்திரும்ப தேவன் தவணைக்காலமாக கொடுத்ததை காண்கிறோம்.

**காலப்பகுதி - கிபி 313 முதல் கிபி 1157(844வருடங்கள்) வரை.**



## *சபை - 4*

## *சபையின் பெயர் : தியத்தீரா*

வெளிப்படுத்தல் 2:18 'தியத்தீரா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்.."

ஆம். இந்த நான்காவது சபையின் காலப்பகுதியும், இதற்கு முந்தைய சபையின் காலப்பகுதி முடிவடைந்த கிபி 1157 வருடம் துவங்கியிருக்கவேண்டும். இப்படியிருக்க, இந்த சபையின் காலப்பகுதி முடிவுக்கு வந்தது எப்பொழுது என்று, இதற்கு அடுத்த சபையின் காலப்பிரிவோடு தொடர்புடைய வசனத்தில் காணப்படுகிறது -

**வெளிப்படுத்தல் 9:5**

***"மேலும் அவர்களைக்கொலை செய்யும்படிக்கு அவைகளுக்கு உத்தரவு கொடுக்கப்படாமல், ஐந்து மாதமளவும் அவர்களை வேதனைப்படுத்தும்படிக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது"***

இது எதைக் குறிக்கிறது? இந்த "ஐந்து மாதங்கள்" என்பது ஐந்தாவது எக்காளம் ஊதப்பட்ட காலப்பகுதியில் நிறைவேறுகிற ஒரு தீர்க்கதரிசன காலப்பகுதியைக் குறிக்கிறது. மேலும், இது ஐந்தாவது சபையின் காலப்பகுதியோடு தொடர்புடையதாக இருப்பதையும் கீழே வாசிக்கிறோம் -

**வெளிப்படுத்தல் 9:1-3**

***"ஐந்தாம் தூதன் எக்காளம் ஊதினான். அப்பொழுது வானத்திலிருந்து பூமியின் மேல் விழுந்த ஒரு நட்சத்திரத்தைக் கண்டேன். அவனுக்குப் பாதாளக் குழியின் திறவுகோல் கொடுக்கப்பட்டது. அவன் பாதாளக் குழியைத் திறந்தான். உடனே பெருஞ்சூளையின் புகையைப்போல அந்தக் குழியிலிருந்து புகை எழும்பிற்று. அந்தக் குழியின் புகையினால் சூரியனும் ஆகாயமும் அந்தகாரப்பட்டது. அந்தப் புகையிலிருந்து வெட்டுக்கிளிகள் புறப்பட்டுப் பூமியின்மேல் வந்தது. அவைகளுக்குப் பூமியிலுள்ள தேள்களின் வல்லமைக்கொப்பான வல்லமை கொடுக்கப்பட்டது"***

இதன் பொருளை இன்று நாம் தியானிக்கப்போவதில்லை. ஆனால் இப்போதைக்கு இது ஐந்தாம் சபையின் காலப்பகுதியானது 'ஐந்து மாதங்கள்" என்ற தீர்க்கதரிசன காலப்பகுதியை உடையது என்பதை மட்டும் அறிந்துகொண்டால்போதும்.

இந்த ஐந்து மாதங்கள் என்பது 5X30 = 150 தீர்க்கதரிசன நாட்கள்.
150 தீர்க்கதரிசன நாட்கள் என்பது - 150 சொல்லர்த்தமான வருடங்கள்.

இதன்மூலம், சீர்திருத்துதலின் வருடமாகிய 1517ல் முடிவுக்குவரும் "சர்தை" என்ற ஐந்தாம் சபையின் காலப்பகுதி 150 வருடங்களுக்கு முன்னதாக துவங்கியிருக்கவேண்டும். இவ்விதமாக கணக்கிடும்போது, அந்த வருடம் -

**1517 - 150 ஸ்ரீ கிபி 1367**

இதன்மூலம் கிபி 1367ம் வருடம் என்பது தியத்தீரா சபையின்காலப்பகுதி முடிவடைந்த வருடமாக இருக்கிறது.

**காலப்பகுதி - கிபி 1157 முதல் கிபி 1367(210 வருடங்கள்) வரை.**

## சபை - 5

## சபையின் பெயர் - சர்தை



**வெளிப்படுத்தல் 3:1**

***"சர்தை சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்..."***

இந்த ஐந்தாவது சபையாகிய சர்தையின் காலப்பகுதி, கிபி 1367ம் வருடம் துவங்கி, சீர்திருத்துதல் துவங்கின வருடமாகிய கிபி 1517ம் வருடம் முடிவுக்கு வந்தது.

**காலப்பகுதி - கிபி 1367 முதல் கிபி 1517(150 வருடங்கள்) வரை.**

## *சபை - 6*

## *சபையின் பெயர் - பிலதெல்பியா*



**வெளிப்படுத்தல் 3:7**

***"பிலதெல்பியா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்.."***

இது சீர்திருத்துதலின் வருடமாகிய கிபி 1517ல் துவங்கிய ஆறாவது சபையின் காலப்பகுதியாகும். இது இரண்டு வசனங்களை ஒப்பிடுவதன்மூலம் அடையாளம் காணப்படுகிறது.

**வெளிப்படுத்தல் 3:11,20**

***"இதோ சீக்கிரமாய் வருகிறேன்"***

***"இதோ வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்"***

ஆறாவதுசபையின் காலப்பகுதியின்போது கர்த்தர்.. தம் இரண்டாம் வருகைக்கு வெகு அருகாமையில் இருப்பதாகவும், ஏழாவது சபையின் காலப்பகுதியில் அவர் உண்மையிலேயே வந்திருந்து பிரசன்னமாகியிருப்பார் என்றும் அறிவிக்கிறார்

இவ்விதமாக, இரண்டாம் வருகையின் வருடமானது, ஆறாவது மற்றும் ஏழாவது சபையின் காலப்பகுதிகளுக்கு இடையிலான வருடமாக இருக்கிறது.

இந்த 1874ம் வருடம் ஆறாவது சபை காலப்பகுதி முடிவடைந்து, ஏழாவது சபையின் காலப்பகுதி துவங்கியது. இதன்படி

**காலப்பகுதி - கிபி 1517 முதல் கிபி 1874வரை(357 வருடங்கள்)**



# சபை - 7
# சபையின் பெயர் : லவோதோக்கியா

**வெளிப்படுத்தல் 3:14**

***"லவோதிக்கேயா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்.."***

சபையின் ஏழாவதும், கடைசியுமான காலப்பிரிவானது கர்த்தருடைய இரண்டாம் வருகையின் வருடமாகிய 1874ம் ஆண்டு துவங்கியது. இந்த லவோதோக்கியா சபையின் காலப்பகுதி முழுவதும் இரண்டாம் வருகையில் ராஜாவாக வந்திருக்கும் நம் கர்த்தர் பிரசன்னமாகியிருக்கிறார். இந்த கடைசி சபையாகிய ஏழாவது சபையின் காலப்பகுதியின் முடிவு நம்முடைய நாட்களில் இன்னும் சில வருடங்களே நிறைவேறவேண்டியிருப்பதை காண்கிறோம்.

**காலப்பகுதி - கிபி 1874 முதல் சபையின் நிறைவுவரை**

இதுவே ஏழு சபைகளும் சபை சரித்திரத்தில் காணப்படுகிற அவைகளின் காலப்பிரிவுகளுமாகும். இப்பொழுது , நாம் இந்த ஏழு காலப்பிரிவுகளில், சபையின் சரித்திரத்தில் நிறைவேறின சில சம்பவங்கள் மத்தேயு 13ம் அதிகாரத்தில் கர்த்தர் பேசின ஏழு உவமைகளில் வெளிப்படுத்தப்பட்டிருப்பதை காணலாம் -

**மத்தேயு 13:1-8**

***"இயேசு அநேக உவமைகளை அவர்களுக்குச் சொன்னார் . கேளுங்கள், விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான். அவன் விதைக்கையில் சில விதை வழியருகே விழுந்தது. பறவைகள் வந்து அதைப் பட்சித்துப்போட்டது. சில விதை அதிக மண்ணில்லாத கற்பாறை இடங்களில் விழுந்தது. மண் ஆழமாயிராததினாலே அது சீக்கிரமாய் முளைத்தது. வெயில் ஏறினபோதோ, தீய்ந்துபோய், வேரில்லாமையால் உலர்ந்து போயிற்று. சில விதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தது. முள் வளர்ந்து அதை நெருக்கிப்போட்டது. சில விதையோ நல்ல நிலத்தில் விழுந்து, சிலது நூறாகவும், சிலது அறுபதாகவும் சிலது முப்பதாகவும் பலன் தந்தது"***



இந்த உவமை முதலாம் சபையின் காலப்பகுதியாகிய எபேசுவின்போது, இராஜ்யத்தின் சுவிசேஷத்தை "விதைக்க" அல்லது "போதிக்க" கர்த்தருடைய பன்னிரெண்டு அப்போஸ்தலர்கள் மற்றும் சீஷர்கள் போதகர் மூலம் அனுப்பப்பட்டதை சித்தரிக்கிறது.

**மத்தேயு 28:19,20**

***"ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதாகுமாரன் பரிசுத்தஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்"***

மேலும்

**அப்போஸ்தலர் 1:8**

***"பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து,எருசலேமிலும் , யூதேயா முழுவதிலும் சமாரியாவிலும் பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்"***




இது சுவிசேஷயுக முழுவதிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கான பிரயாணங்கள் செய்த சபையின் காலப்பிரிவாகும். மேலும் வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிற பிரகாரம், இராஜ்யத்தின் சுவிசேஷமானது மாபெரும் சவால்களுக்கும் உபத்திரவங்களுக்கும் மத்தியில் "விதைக்கப்பட்டது"

இதில் ***"சில விதை வழியருகே விழுந்தன"*** - மாம்ச காதுகளினால் கேட்டு 'புரிந்துகொள்ளும் காது" இல்லாததால் , தேவவார்த்தைகளைப் புரிந்துகொள்ளத் தவறினவர்களைக் குறிக்கிறது

***"சில விதைகள் கற்பாறையின் மேல் விழுந்தது"*** - வசனத்தைக் கேட்டவுடன் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிற அதேசமயம், உபத்திரவங்களையும் போராட்டங்களையும் சந்திக்க உறுதியான குணலட்சணங்களைபெற்றிராதவர்களைக் குறிக்கும்.

***சில விதைகள் முள்ளுள்ள இடங்களில் விழுந்தது"*** - வசனத்தைக் கேட்டு மகிழ்ந்தவர்களைக்குறிக்கிறது. ஆனால் அவர்கள் இந்த உலகத்தின் கவலைகளினால் நிறைந்து சீஷத்துவத்திற்கான நிபந்தனைகளை நிறைவேற்ற முடியாமல் போன வகுப்பார் ஆவர்.

***"சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தன"*** - வசனத்தைக்கேட்டு மகிழ்ந்து, விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடினவர்களைக் குறிக்கும்.

ஆம். கர்த்தருடைய உண்மையான சீஷர்களை அடையாளங்காண அதிகம் விதைக்கவேண்டியதாயிருக்கிறது.

இப்பொழுது இரண்டாம் உவமையை பார்ப்போம் -

## 2. மத்தேயு 13:24-30 "கோதுமை மற்றும் களைகளைப் பற்றிய உவமை"

***"வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார். பரலோக ராஜ்யம்தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது. மனுஷர் நித்திரைபண்ணுகையில் அவனுடைய சத்துரு வந்து ,கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப் போனான். பயிரானது வளர்ந்து கதிர்விட்டபோது , களைகளும் காணப்பட்டது. வீட்டெஜமானுடைய வேலைக்காரர் அவனிடத்தில் வந்து, ஆண்டவனே, நீர் உமது நிலத்தில் நல்ல விதையை விதைத்தீர் அல்லவா. பின்னே எப்படி அதில்***



*களைகள் உண்டானது என்றார்கள். அதற்கு அவன், சத்துரு அதைச் செய்தான் என்றான். அப்பொழுது வேலைக்காரர், நாங்கள் போய் அவைகளைப் பிடுங்கிப்போட உமக்குச் சித்தமா? என்று கேட்டார்கள். அதற்கு அவன், வேண்டாம், களைகளைப் பிடுங்கும்போது நீங்கள் கோதுமையையுங்கூட வேரோடு பிடுங்காதபடிக்கு இரண்டையும்அறுப்புமட்டும் வளரவிடுங்கள். அறுப்புக்காலத்தில் நான் அறுக்கிறவர்களை நோக்கி, முதலாவது களைகளைப் பிடுங்கி, அவைகளைச் சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக்கட்டுங்கள். கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள் என்பேன் என்று சொன்னான் என்றார்"*

இந்த உவமை இரண்டாவது சபையாகிய சிமிர்னாவின் காலப்பகுதியைக் குறிக்கிறது.
இதில், சத்துரு - சாத்தானைக் குறிக்கிறது. வேதத்தில் உள்ள "மகா பரிசுத்தமான விசுவாச சத்தியங்களை" கள்ள உபதேசங்களின் மூலம் சீர்குலைக்கத் துவங்கின காலமாகும். அப்பொழுது தேவனுடைய ஒவ்வொரு சத்தியத்திற்கும் பதிலாக அசத்தியம் ஏற்படுத்தப்பட்டது.
இது ஒருகுறிப்பிட்ட காலப்பகுதிக்குள் படிப்படியாக நிறைவேறியதை பவுல் அப்போஸ்தலனின் வார்த்தைகள் கூறுகிறது -

**1தீமோத்தேயு 4:1**

*"ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தைவிட்டு விலகிப்போவார்கள்"*

இந்த கள்ள உபதேசங்களுக்குள் விசுவாசிகள் கொண்டுவரப்பட்டனர். இவர்கள் பெயரளவில் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர்களை கோதுமை மணியைப்போல் காணப்படும் "களைகள்" என்ற அடையாளத்தின் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது.

சபையின் இந்த காலப்பகுதியில், வேதத்தில் எவ்வித ஆதாரமும் காணப்படாத , உலகப்பிரகாரமான சத்தியங்கள்சபையின் விசுவாசத்திற்குள் புகுத்தப்பட்டது.
இப்பொழுது மூன்றாவது உவமையைப் பார்ப்போம் -

## 3. மத்தேயு 13:31,32 "கடுகு விதை பற்றின உவமை"

*"வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார் - பரலோக ராஜ்யம் கடுகுவிதைக்கு ஒப்பாயிருக்கிறது. அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் நிலத்தில் விதைத்தான். அது சகல விதைகளிலும் சிறிதாயிருந்தும், வளரும்போது, சகல பூண்டுகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதின் கிளைகளில் வந்து அடையத்தக்க மரமாகும் என்றார்"*




இந்த உவமை மூன்றாவது சபையாகிய "பெர்கமுவின்" காலப்பகுதியில் மிகச் சிறிதாக ஸ்தாபிக்கப்பட்டிருந்த கிறிஸ்தவ சபை, இயற்கைக்கு மாறான அசாதாரண வளர்ச்சி அடைந்ததை சித்தரிக்கிறது. பொதுவாக,

மிகச் சிறிதான கடுகுவிதை அதிகபட்சமாக 3-4 அடி உயரம் வரை வளரும் செடியாகும். ஒருபோதும் மரமாக அது வளர்ச்சியடையாது. அதுபோலவே, உண்மையான விதையாகிய இராஜ்யத்தின் சுவிசேஷமும், அதன்உபதேசங்களால் அநேக சீஷர்களை விசுவாசிகளாக ஒருபோதும் ஈர்க்காது.

**2தீமோத்தேயு2:11**

***"இந்த வார்த்தை உண்மையுள்ளது. என்னவெனில், நாம் அவரோடேகூட மரித்தோமானால் அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்"***

இந்த சத்திய உபதேசங்களின்மூலம் கிறிஸ்தவ சபை அதிக அளவில் வளர்ச்சி பெறாது. ஆனால் கிபி 315 - 320 க்கு இடைப்பட்ட வருடங்களில் கிறிஸ்தவ மதத்திற்கு ரோம சக்கரவர்த்தி கான்ஸ்டன்டைன் மதம் மாறினதைத் தொடர்ந்து, கிறிஸ்தவ மதம் மிகப்பெரிய வளர்ச்சியைக் கண்டது. இதைத் தொடர்ந்து அநேக கிறிஸ்தவ கண்காணிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு,நைஸ் ஆலோசனைக் கூட்டம் ஆயத்தப்படுத்தப்பட்டது.

இங்கு "மாபெரும் கள்ளப்போதனையாகிய திருத்துவம் ஏற்படுத்தப்படுவதற்கான முதல்முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

உண்மையில் இவ்விதமான உலகப்பிரகாரமான சத்தியங்கள் அநேகம் புகுத்தப்பட்டதும், சக்கரவர்த்தி கிறிஸ்தவனாக மாறினதும், கிறிஸ்துவ மதம் ரோம சாம்ராஜ்யத்தின் பிரபலமான வழிபாட்டு முறையாக மாற காரணமானது.

இப்பொழுது நான்காவது உவமைக்கு கடந்துசெல்வோம் -

## *4. மத்தேயு 13:33*
## *"புளித்த மாவு பற்றின உவமை"*

***"வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார் - பரலோக ராஜ்யம் புளித்தமாவுக்கு ஒப்பாயிருக்கிறது. அதை ஒரு ஸ்திரீ எடுத்து, முழுவதும் புளிக்கும்வரைக்கும் மூன்றுபடி மாவிலே அடக்கிவைத்தாள் என்றார்"***



இந்த உவமை நான்காவது சபையின் காலப்பகுதியாகிய தியத்தீராவில் ஸ்திரீ - ஆளுகையிலிருந்த பெயர்சபையாகிய போப்பு மார்க்க அமைப்பு, வேதத்தைப் புதைத்துவைத்து, "புளித்தமாவாகிய"- கள்ளபோதகங்கள், நம்பிக்கைகள், புறமத வழிபாட்டு போதனைகளை சபையின் விசுவாசத்திற்குள் அறிமுகப்படுத்தியது. இந்த காலப்பகுதியில் தேவனுடைய மெய் சத்தியங்கள் முற்றிலும் காணாமல்போனது. வேத ஆராய்ச்சி முற்றிலும் புறக்கணிக்கப்பட்டு, விசுவாசப் பிரமாணங்களின் அடிப்படையில் உருவான விசுவாசம் புகுத்தப்பட்டது.

மூன்று முக்கியமான விசுவாசப் பிரமாணங்கள் இருந்தன.அவை -

*1. அப்போஸ்தலர் விசுவாச அறிக்கை(115 வார்த்தைகள்)*

*2. நீசின் விசுவாச அறிக்கை (230 வார்த்தைகள்)*

### 3. அதேனேசியஸ் விசுவாச அறிக்கை(702 வார்த்தைகள்)

இவ்விதமாக வேதத்தை அடிப்படையாகக்கொண்ட போதனைகள் மீது இருக்கவேண்டிய கிறிஸ்தவ விசுவாசம்முற்றிலுமாக திசைதிருப்பப்பட்டு, இந்த விசுவாச அறிக்கைகளின்மீது கவனம் செலுத்தப்பட்டதன்மூலம், சபையானது இருண்ட யுகத்திற்குள் பிரவேசித்தது. இவையனைத்தும் இந்த உவமையில் வரும் "முழுவதும் புளிக்கும் வரைக்கும்" என்ற வார்த்தையின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது

இப்பொழுது நாம் ஐந்தாவது உவமையை பார்ப்போம் -

## மத்தேயு 13:44

### "புதைந்திருந்த பொக்கிஷத்தைப் பற்றிய உவமை"

***"அன்றியும் பரலோக ராஜ்யம் நிலத்திலே புதைந்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது. அதை ஒரு மனுஷன் கண்டு, மறைத்து, அதைப்பற்றிய சந்தோஷத்தினாலே போய் தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தைக் கொள்ளுகிறான்"***



இந்த உவமை ஐந்தாவது சபையின் காலப்பகுதியாகிய "சர்தையைக்" குறிக்கிறது. இது 1517ம் வருடம் துவங்கிய சீர்திருத்தலுக்கு முந்தைய காலப்பகுதியாகும். இங்கு ***புதைக்கப்பட்ட பொக்கிஷம்*** - தேவனுடைய வார்த்தையாகிய வேதத்தைக் குறிக்கிறது. தேவனுடைய வார்த்தையானது புரிந்து கொள்ளமுடியாத பாஷைகளாகிய லத்தீன் மற்றும் கிரேக்க பாஷைகளில் இருந்த காரணத்தால், சாதாரண மக்கள் வாசிக்கமுடியாமல் புதைக்கப்பட்ட நிலையிலிருந்தது. அது ப்ரென்ச் மற்றும் ஆங்கில பாஷைகளுக்கு மொழிபெயர்க்கப்பட்டதன் மூலம் வெளியாக்கப்பட்டது. இவ்விதமாக வேதத்திலிருந்து மாபெரும் சத்தியங்கள் வெளிக்கொணரப்பட்டு, கள்ள உபதேசங்கள்மூலம் உருவான 'இருளை" அகற்றும் சத்திய வெளிச்சம் பிரகாசித்தது.

இந்த மாபெரும் பொக்கிஷங்களை கண்டுபிடித்த அநேகர், தங்களுடைய அனைத்தையும் தேவனுடைய வார்த்தைக்கு ஊழியம்செய்வதில் அர்ப்பணித்தார்கள். சத்தியங்களை சாதாரண ஜனங்களுக்கு கொண்டு செல்ல மிகப்பெரும் பிரயாசம் எடுக்கப்பட்டது.

இப்பொழுது ஆறாவது உவமைக்கு கடந்துசெல்வோம் -



## 6. மத்தேயு 13:45

## "விலையுயர்ந்த முத்து பற்றின உவமை"

***"மேலும் பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடும் வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது"***

இந்த உவமை ஆறாவது சபையின் காலப்பகுதியாகிய பிலதெல்பியாவைக் குறிக்கிறது. இது கிபி 1517அக்டோபர் 31ம்தேதி

துவங்கிய சீர்திருத்தலுக்கு பின்பு வந்த காலபகுதியாகும். இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் "முத்துவியாபாரி" மற்றும் "நல்லமுத்துக்கள்" என்பது எதைக் குறிக்கிறது? இங்கு முத்து வியாபாரி என்பது இக்காலப்பகுதியில் நல்ல முத்துக்களைத் தேடின- ஒரு தனி மனிதனைக் குறிக்கிறது.

இந்த முத்துக்களைப் பற்றிய விளக்கத்தை பின்வரும் வசனத்தில் நாம் காண்கிறோம்-

**மத்தேயு 7:6**

***"பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள்.***
***உங்கள் முத்துக்களைப் பன்றிகள் முன் போடாதேயுங்கள்.."***

இங்கு முத்துக்கள்- பரிசுத்தமானதைக் குறிக்கிறது. இவை தேவனுடைய வார்த்தைகளாகும்.

***"நல்ல முத்துக்களைத் தேடுவது"*** - வேத ஆராய்ச்சியின்மூலம் சத்தியத்தைத் தேடலைக்குறிக்கிறது. அந்த முத்துவியாபாரி - சீர்திருத்துதலின் தந்தை என்று அழைக்கப்படும் - மார்ட்டின் லூதரைக் குறிக்கும்.

இங்கு அவர் கண்டுபிடித்த அந்த ஒரு "விலையேறப்பெற்ற முத்து" - பின்வரும் வசனத்தில் காணப்படுகிற மாபெரும் சத்தியமாகும் -

**ரோமர் 1:17**

***"விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி,***
***விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று***
***அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது"***

ஆம். இது அன்றைக்கு ஒரு மாபெரும் சத்தியமாக உணரப்பட்டது. அதுவரை, பாவத்திற்கான மன்னிப்பு என்பது பதக்கங்கள், பாவமன்னிப்பு சீட்டு, பரிசுத்த எண்ணை, தீர்த்தம் இதுபோன்றவைகளை விலைகொடுத்து வாங்குவதன்மூலம் தரப்பட்டது. வேதத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட இந்த சத்தியம் எளிமையானதும் ஆச்சரியமானதுமாய் இருந்தது. மார்ட்டின் லூதரைத் தொடர்ந்து, ஜான் வெஸ்லி, ஜான் நாக்ஸ், ஜான் ஹஸ் போன்றவர்கள் தோன்றினார்கள். இவர்களும் வேத வசனங்களிலிருந்து, "சீஷத்துவம்" மற்றும் 'கிறிஸ்தவனாக வாழ்வது" போன்ற மாபெரும் சத்தியங்களை கண்டுபிடித்தார்கள். மேலும் அநேகர் தங்களுக்குரிய எல்லாவற்றையும் விற்று, தேவனுடைய சத்தியத்திற்கு ஊழியம்செய்ய முழுமையாக அர்ப்பணித்தார்கள்.

மேலும் இந்தக் காலப்பகுதியில், வேதமானது ஜெர்மானிய மொழியில் மார்ட்டின் லூதரால் மொழிபெயர்க்கப்பட்டது. பின்னாளில் தி கிங் ஜேம்ஸ் வெர்சன்(The King James version) கிபி 1611ம் வருடம் அச்சிடப்பட்டது. அதைத் தொடர்ந்து 1799ம் வருடம் போப்பு மார்க்கம் விழுந்ததற்குப் பின்பு, 1803ம் வருடத்தில் அநேக இடங்களில் ஸ்தாபிக்கப்பட்ட வேதாகம சங்கங்களின்மூலம் வேதம் முறையாக அச்சிடப்பட துவங்கியது.

வேதம் அநேக மொழிகளில் அச்சிடப்பட்டு, வருடாவருடம் ஆயிரக்கணக்கில் விநியோகிக்கப்பட்டது

இப்பொழுது ஏழாவது உவமைக்கு கடந்துசெல்வோம் -

## மத்தேயு 13:47,48
## "மீன் வலையைப் பற்றின உவமை"

***"அன்றியும் பரலோகஇராஜ்யம் கடலிலே போடப்பட்டு, சகலவிதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது. அது நிறைந்தபோது***



***அதைக் கரையில் இழுத்து, உட்கார்ந்து நல்லவைகளைக் கூடைகளில் சேர்த்து, ஆகாதவைகளை எறிந்துபோடுவார்கள்"***

இந்த உவமை ஏழாம் சபையின் காலப்பகுதியாகிய "லவோதோக்கியா"வைக் குறிக்கிறது. இக்காலப் பகுதியில், கோதுமை மற்றும் களைகள் பிரிக்கப்படும் அறுவடையை இங்கு, நல்லமீன்கள் மற்றும் ஆகாத மீன்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த காலப்பகுதியில் கர்த்தர்தாமே பிரதான அறுவடையாளராக - அவரது முதல் வருகையில் யூதயுக அறுவடையில் இருந்ததுபோல் இங்கும் இருக்கிறார். அவர் அவருடைய சபையைப் பிரித்து நியாயந்தீர்ப்பதை வாசிக்கிறோம் -

**லூக்கா 19:15**

***"அவன் இராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பிவந்தபோது தன்னிடத்தில் திரவியம் வாங்கியிருந்த அந்த ஊழியக்காரரில் அவனவன் வியாபாரம்பண்ணிச் சம்பாதித்தது இவ்வளவென்று அறியும்படி அவர்களைத் தன்னிடத்தில் அழைத்து வரச்சொன்னான்"***

இங்கு தனிப்பட்ட முறையில் அவனவன் சபையின் அங்கத்தினர் பிரிக்கப்பட்டு, நியாயந்தீர்க்கப்படுவதை உவமைபாணியில் காண்பிக்கப்பட்டுள்ளது. நாம் தற்போது அறுவடைக் காலத்தின் முடிவில்- அதாவது கோதுமை மணிகள் களஞ்சியத்தில் சேர்க்கப்படுகிற காலப்பகுதியில் வாழ்ந்துவருகிறோம்.
1874ல் துவங்கிய அறுவடை வெகு சீக்கிரம் நிறைவடையக் காத்திருக்கிறது.

இந்த 7 சபைகளின் சரித்திரத்தை அறிந்துகொண்ட நாம், இப்பொழுது அவர் வலது கையில் காணப்பட்ட "ஏழு நட்சத்திரங்கள்"(வெளிப்படுத்தல் 1:16) எதைக் குறிக்கிறது என்று காண்போம்-

**வெளிப்படுத்தல் 1:20**

***"அந்த ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபைகளின் தூதர்களாம்.."***

இங்கு தூதர்கள் என்ற வார்த்தை,"ஆகிலோஸ்" (aggelos) என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வருகிறது. (Strongs Greek No -32) இதற்கு "தூது செல்பவர்" அல்லது "மேய்ப்பன்" என்று பொருளாகும்.இதன்மூலம் இந்த "ஏழுதூதர்களும்" சபையின் ஏழு கட்டங்களாகிய "காலப்பகுதிகளில்" கர்த்தர் பயன்படுத்திய விசேஷமான ஏழு தூதர்கள் ஆவர். இவர்கள் ஆவிக்குரிய ஜீவிகளாயிராமல், மாம்சத்திலிருந்தவர்களும், "ஏழு சபையின்" ஒவ்வொரு காலப்பகுதியிலும் ஒரு விசேஷமான சத்தியத்தை வெளிப்படுத்த கர்த்தர் தேர்ந்தெடுத்த விசேஷமான சகோதரர்களாகவும் இருக்கிறார்கள்.

இந்த தூதர்கள் "அவருடைய வலதுகரத்தில் இருப்பது" - கர்த்தரால் விசேஷமாக தேர்ந்தெடுக்கப்பட்ட பாத்திரங்கள் என்றும், இவர்கள் கர்த்தருடைய கண்காணிப்பிலும், பாதுகாப்பான வழிநடத்துதலிலும் இருப்பதை அடையாளப்படுத்துகிறது.

இப்படியிருக்க, இந்த சுவிசேஷயுகத்தின் முடிவில் வாழ்ந்துகொண்டிருக்கிற நம்மால் இந்த ஏழு தூதர்களை(ஏழு நட்சத்திரங்கள்) அடையாளங்காணமுடியுமா? இதை அந்த "ஏழு சபைகளில்" முதலாவது சபையை கவனிப்பதன்மூலம் முயற்சிக்கலாம் -

## 1. எபேசு (33 கிபி - 70 கிபி)




நாம் முதலாவது சபையைக் குறித்து வாசிக்கையில் எழும் கேள்வி என்னவெனில் -

ஆதிகால சபையில் சத்தியத்தை வெளிப்படுத்துவதற்கு கர்த்தர் அதிகமாக பயன்படுத்திய பாத்திரம் யார் என்பதே.

இதற்கான பதிலை புதிய ஏற்பாட்டை கவனிப்பதிலேயே நாம் கண்டறியமுடியும்.

- அது "கடைசி" அப்போஸ்தலனாகிய பவுல் அப்போஸ்தலனே ஆவர். அவர் 14 நிருபங்களை எழுதியுள்ளார். விழுந்துபோன யூதாஸ்காரியோத்தின் இடத்தை நிரப்புவதற்காக இயேசு தாமே தெரிந்துகொண்ட கடைசி அப்போஸ்தலனாக இவர் இருப்பதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

**அப்போஸ்தலர் 9:15**

***"அதற்கு கர்த்தர், நீ போ, அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரயேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான்"***

ஆம். சபையை துன்புறுத்த தமஸ்சுவை நோக்கி பயணித்த தர்சு பட்டணத்தானாகிய சவுலை கர்த்தர் தேர்ந்தெடுத்தார்.

ஆதிகால சபையில் பவுலின் அப்போஸ்தல அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளாத அநேக கிறிஸ்தவர்கள் இருந்தனர். இதைக்குறித்து அவர் பின்வரும் வசனத்தில் தெளிவுபடுத்துகிறார் -

**கலாத்தியர் 1:1**

***"மனுஷராலுமல்ல, மனுஷன் மூலமாயுமல்ல, இயேசுகிறிஸ்துவினாலும், அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின பிதாவாகிய தேவனாலும் அப்போஸ்தலனாயிருக்கிற பவுலாகிய நானும்..."***

இங்கு பவுல் அப்போஸ்தலனாக தன்னைக் குறித்து தெளிவுபடுத்தும் விதத்தை நாம் கவனிக்கவேண்டும். இவர் மற்ற பதினோருஅப்போஸ்தலர்களால் தேர்ந்தெடுக்கப்படாததை, "ஒரு மனிதனாலும் அல்ல" என்று கூறுவதன் மூலம் தெளிவுபடுத்துகிறார்.

"மனிதர் மூலமாகவும் அல்ல" - சீட்டுப்போடுதலின் மூலம் மனிதர்கள் தேர்ந்தெடுப்பதுபோல் தான் தேர்ந்தெடுக்கப்படாததைக் குறிக்கிறது. மாறாக, இயேசுகிறிஸ்துவினாலும், அவரை மரித்தோரிலிருந்து எழுப்பின பிதாவாகிய தேவனாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரத்தை இது குறிக்கிறது.

அப்போஸ்தலனாகிய பவுல் ஒரு பரிசேயனாக, யூத நியாயசாஸ்திரியாகிய கமாலியேலின் கீழ் பயின்றார்(அப்22:3). ஆனால் ஒரு கிறிஸ்தவனாக மாறினபின்பு, கர்த்தராகிய இயேசுவின்மூலம் சத்தியம் போதிக்கப்பட்டு, பயிற்றுவிக்கப்பட்டது ஒரு மிகப்பெரிய விஷயமாக இருப்பதை நாம் கீழே கவனிக்கிறோம் -

**கலாத்தியர் 1:11,12**

***"மேலும் சகோதரரே, என்னால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் மனுஷருடைய யோசனையின்படியானதல்லவென்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன். நான்அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை. மனுஷனால் கற்றதுமில்லை, இயேசுகிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார்"***

அப்போஸ்தலனாகிய பவுல் புறஜாதிகளுக்கான விசேஷ அப்போஸ்தலனாக இருக்கிறார். இவருடைய ஊழியம் மற்றும் செய்த பணிகளைக் குறித்து அப்போஸ்தலர்களுக்கு எழுதின நிருபத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இவருடைய வாழ்க்கை கிபி 67ம் ஆண்டில், ரோமாபுரியில் தலை துண்டிக்கப்பட்டு முடிவுக்கு வந்தது. இவர் கடைசியாக தேர்ந்தெடுக்கப்பட்ட அப்போஸ்தலராக இருந்தாலும், அவர்கள் எல்லாரிலும் பெரியவராக இவரே இருக்கிறார்.

## *2. சிமிர்னா (கிபி 70 - கிபி 313)*




சபையின் இந்த இரண்டாவது காலப்பகுதியை கவனிக்கையில், அப்பொழுது சத்திய வெளிச்சத்தை கொண்டுவர கர்த்தர் பயன்படுத்திய தூதன் யார் என்று அடையாளம் காண நாம் மறுபடியும் புதிய ஏற்பாட்டை கவனிக்கவேண்டியதாக இருக்கிறது. அது - அப்போஸ்தலர்களில் ஒருவரும், இயேசுவின் பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் இளையவரும், வேதத்தில் ஐந்து புத்தகங்களைகிபி 90-96 இடைப்பட்ட வருடங்களில் எழுதினவருமாவார்.

அவர் -அன்பான அப்போஸ்தலன் என்று அழைக்கப்படும் யோவான் ஆவார். இவருடைய வைராக்கியம் மற்றும் உற்சாகத்தினால் இவர் கர்த்தரால் விசேஷமாக நேசிக்கப்பட்டதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

**யோவான் 21:20**

***"பேதுரு திரும்பிப் பார்த்து, இயேசுவுக்கு அன்பாயிருந்தவனும், இராப்போஜனம் பண்ணுகையில் அவர் மார்பிலே சாய்ந்து, ஆண்டவரே உம்மைக் காட்டிக்கொடுக்கிறவன் யார் என்று கேட்டவனுமாகிய சீஷன் பின்னே வருகிறதைக் கண்டான்"***

மேலும், மாம்சமாக பூமியில் வருவதற்கு முந்தி கர்த்தர் இருந்த நிலையைக் குறித்தும், ஆதிமுதல் பரலோகப் பிதாவிடம் அவருக்கிருந்த உறவையும் வெளிப்படுத்துவதற்கு அப்போஸ்தலனாகிய யோவான் பெரிதும் பயன்படுத்தப்பட்டார். இவர் தெய்வீக குணலட்சணமாகிய அன்பைக் குறித்து அதிகம் போதித்திருப்பதால் அன்பின் அப்போஸ்தலன் என்றழைக்கப்படுகிறார். இவர் நடக்கமுடியாத அளவு முதியவரானபோது, கூட்டத்தில் கலந்துகொள்ளும் சகோதரர்களுக்குஅவருடைய உற்சாக வார்த்தைகளை எடுத்துச்சொல்ல, அவரை அவருடைய சீஷர்கள் பல்லக்கில் சுமந்துசென்றதாக சரித்திரம் கூறுகிறது. அவ்வாறு செல்கையில் அவர் சொன்னது -

“ஒருவருக்கொருவர் அன்பாயிருங்கள், ஏனெனில் ஆண்டவர் இதையே நமக்கு போதித்தார்...”

மேலும் ஒரு முறை இவரை கொதிக்கும் எண்ணை கொப்பரையில் போட்டபோதிலும், காயப்படாதவராக வெளியே வந்ததாக சரித்திரம் கூறுகிறது.

மேலும் இவர் சில வருடங்கள் பத்மு தீவில் சிறையிலடைக்கப்பட்டிருந்தார். அப்பொழுது அவர் வெளிப்படுத்தின விசேஷத்தை எழுதினார்.

அப்போஸ்தலனாகிய யோவான் மரிக்கும்பொழுது கிட்டத்தட்ட 100 வயதை நெருங்கிய முதியவராக இருந்தார். இவரே அப்போஸ்தலர்களில் கடைசியாக மரித்தவர். 12 அப்போஸ்தலர்களில் இரத்த சாட்சியாக மரிக்காமல், இயற்கை மரணத்தை சந்தித்த ஒரே அப்போஸ்தலனாகவும் இருக்கிறார்.

## 3. பெர்கமு (கிபி 313 - கிபி 1157)

ஏரியஸ்



சபையின் இந்த மூன்றாம் காலப்பகுதிக்கு வருகிற நாம், இந்த காலப்பகுதி சத்துருவாகிய சாத்தான் தன் கள்ளபோதனை மற்றும் தவறுகளாகிய விதையை விதைத்த காலம். இக்காலப்பகுதியில் சத்திய வெளிச்சத்தைபிரகாசிக்கச்செய்ய கர்த்தர் தேர்ந்தெடுத்து பயன்படுத்திய “தூதன்” அல்லது “நட்சத்திரம்” யார்?

இவர், கான்ஸ்டான்டின் சக்கரவர்த்தி கிபி 325ம் வருடம், இயேசுவிற்கும் பிதாவிற்கும் இடையில் உள்ள உறவைக் குறித்து விவாதிக்க ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் கலந்துகொண்ட ஒருவரே அந்த தூதன். அந்த விவாதம் ஏரியஸ் மற்றும் அத்தேநேஷியஸ் என்பவர்களுக்கிடையில் நடந்தது. ஒருவர் வயதில் முதியவராகவும் மற்றவர் இளையவராகவும் இருந்தனர். இவர்களில் வயதில் முதியவரான ஏரியஸ், சத்திய வெளிச்சத்தை வெளிக்காண்பித்தார். அதேசமயம் இளையவரான அத்தேநேஷியஸ் இயேசுவும் பிதாவும் “ஒரே நபராக” இருக்கும் நிலையை ஆதரித்தவராவார். இதுவே பின்நாளில் தேவதூஷணமும் , கள்ள உபதேசமுமான “திரித்துவ” போதனையாக வளர்ச்சியடைந்தது.

ஏரியஸின் விவாதம் என்னவெனில்,

***“பிதா என்பவர் பிதா ஆவார்.குமாரன் என்பவர் குமாரன் ஆவார். அப்படியானால், பிதா என்பவர் குமாரனுக்கு முன்பாக இருந்திருக்கவேண்டும். அப்படியானால் ஒரு காலத்தில் குமாரன் என்பவர் இல்லாதிருந்திருக்கவேண்டும். அப்படியானால் ஒரு காலத்தில் இல்லாதிருந்த அனைத்து சிருஷ்டிகளும் உண்டாக்கப்பட்டதுபோல, இவரும் உண்டாக்கப்பட்டவர் ஆவார்.***

இயேசு பிதாவினால் சிருஷ்டிக்கப்பட்ட குமாரன் என்ற சத்தியத்தை இவர் தெளிவாக போதித்தார். இந்த ஏரியஸ் சபையின் மூன்றாவது காலப்பகுதியாகிய பெர்கமுவின் “தூதன்” ஆவார்.

இவர் ஆப்பிரிக்காவில் உள்ள லிபியா தேசத்து ஆசிரியரும், எகிப்திலுள்ள அலெக்ஸாண்டிரியா பட்டணத்து சபையின் மூப்பருமாவார். இந்த சபை ஆதிகாலத்தில் ஸ்தாபிக்கப்பட்ட ஐந்துசபைகளில் ஒன்றாகும். இவர் சுபாவத்தில் எளிமையும் தாழ்மையுள்ளமும் கொண்டவர். அப்போது நடந்த அந்த மாபெரும் விவாதத்தில் அத்தேநேஷியஸின் வாதம் பிரபலமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏரியஸ் காட்டு மிராண்டிகள் வாழும் தீவுக்கு கடத்தப்பட்டார்.

சில நாட்கள் கழித்து அவரை தேடி காட்டுமிராண்டிகள் தீவுக்கு சென்ற சிலர், அவரை உயிருடன் கண்டு ஆச்சரியப்பட்டனர். அவர் காட்டுமிராண்டிகள் சிலரை கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் கொண்டுவந்திருந்தார். வட ஆப்பிரிக்காவில் ஏரியஸ் பிரபலமானவராக இருந்தார். அவரைப் பின்பற்றினவர்கள் “ஏரியன்ஸ்” என்றழைக்கப்பட்டனர். அவருடைய போதனைகள்’ஏரியனிசம்” என்றழைக்கப்பட்டது.

ஏழாவது நூற்றாண்டில் இஸ்லாம் மதம் தோன்றும்வரை வடஆப்பிரிக்கா மற்றும் எகிப்தில் ஏரியனிசத்தின் விசுவாசிகள் அநேகர் இருந்தனர். இன்றும் பிரபலமான பெயர் கிறிஸ்தவ மண்டலம் ஏரியஸை ஒரு “வேத புரட்டர்” என்றும், அத்தேநேஷியசை ஒரு பரிசுத்தவான் என்றும் கருதுகிறது. ஏரியஸ் கிபி 336ம் வருடம் கான்ஸ்டான்டிநோபிளில், விநோதமான சூழ்நிலையில் அகால மரணம் அடைந்தார். அவரது விரோதிகளால் விஷம் வைத்துக் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. ஆம் நம் கர்த்தரும்கூட ஏரியஸைக்குறித்து வெளிப்படுத்தல் 2:13ல் பின்வருமாறு குறிப்பிடுகிறார் -

***“ எனக்கு உண்மையுள்ள சாட்சி”***

## *4. தியத்திரா (கிபி 1157 - கிபி 367)*


பீட்டர் வால்டோ

சபையின் இந்த நான்காம் காலப்பகுதியானது “அந்திக்கிறிஸ்து” அமைப்பாகிய போப்புமார்க்கம் முழு அதிகாரத்துடன் ஸ்தாபிக்கப்பட்டிருந்த காலமாகும்.

இந்த காலப்பகுதியில் சத்திய வெளிச்சத்தை பிரகாசிக்கச்செய்ய கர்த்தர் தேர்ந்தெடுத்த “தூதன்” - பிரான்சு தேசத்திலிருந்து வந்த போப்பு மார்க்கத்தின் முக்கிய அனுதாபி
***“பீட்டர் வால்டோ”*** ஆவார்.

இவர் தென் பிரான்சில் உள்ள லையான்ஸ் பட்டணத்து பணக்கார வியாபாரி. லையான்ஸ் பட்டணத்தின் பிரதான பிரஜைகளுக்கு மத்தியில் பல்வேறு காரியங்களைக் குறித்து 1157ம் வருடம் நடந்த கலந்துறையாடலின்போது, அவர்களில் ஒருவர் திடீரென தரையில் விழுந்து மரிக்க நேர்ந்தது. இந்த சம்பவம் இவரை மிகவும் அதிர்ச்சியடையச்செய்து, மனிதன் மீது விழுந்த மரண சாபத்தையும், மனிதனின் பரிதபிக்கப்பட்ட நிலையையும் நினைவுபடுத்தியது.

இவர் தன் பணக்கார வாழ்க்கையை மாற்றியமைக்கவும், மனந்திரும்பவும் சிந்திக்கத் துவங்கினார். தெய்வீக குணலட்சணத்தை அடைய முயற்சித்து ஏழை எளியவர்களுக்கு உதவிகள் செய்யத் துவங்கினார். மேலும் வைராக்கியத்துடன் வேத வசனங்களை கற்றுக்கொண்டு போதிக்கவும் துவங்கினார்.

அதுமாத்திரமல்ல, அவர் ஸ்டீபனாஸ் டி எவிசா என்றபெயர்கொண்ட கத்தோலிக்க பாதிரியாரை நியமித்து, வேதம் முழுவதையும் லத்தீன் மொழியிலிருந்து பிரன்ச் மொழிக்கு மொழிபெயர்க்கும் முயற்சியை மேற்கொண்டார். அப்பொழுது ரோமன் கத்தோலிக்க நம்பிக்கைகளுக்கும், இயேசுகிறிஸ்துவும் அவரது சீஷர்களும் போதித்த உபதேசங்களுக்குமிடையே காணப்பட்ட மிகப்பெரிய வித்தியாசங்களை கவனித்தார். பின்பு தன் வியாபாரத்தை நிறுத்திவிட்டு,

தன் சொத்துக்களை ஏழை எளியவர்களுக்கு மத்தியில் பகிர்ந்துகொடுத்து, முழுமையான ஊழிய வாழ்க்கையை மேற்கொண்டார். இவருடைய உபதேசங்களைக் கேட்டு அவரைப் பின்பற்றினவர்கள் வால்டேன்ஸ் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் ரோமன் கத்தோலிக்க சபையின் போதனைகள் மற்றும் பாரம்பரிய நம்பிக்கைகளை ஏற்றுக்கொள்வதற்கு பதிலாக, வேத வசனங்கள் போதிப்பவைகளை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று ஜனங்களுக்கு போதித்தனர்.

இவர்களுடைய சத்திய போதனைகள் , எளிமையான, பரிசுத்தமான வாழ்க்கையை வெளிப்படுத்தி, அதன் மூலம் போப்பு மார்க்க அந்தகாரத்தின் மத்தியில் பிரகாசித்த வெளிச்சமாயிருந்தது.

இந்த “வால்டேன்ஸ்” என்பவர்களுக்கு விரோதமாக வளர்ந்த உபத்திரவங்கள், லையான்ஸை விட்டு வெளியேறி பைன் காடுகளிலும் குகைகளிலும் தஞ்சம்புக காரணமானது. இதன்மூலம் ஐரோப்பா முழுவதும் இவர்கள் சத்தியத்தை எடுத்துச்சென்றனர். கடைசியாக, பீட்டர் வால்டோ போமியா என்ற இடத்தில் குடியேறி, அங்கு 1179ம் வருடம் மரித்தார்.

## *5.சர்தை (கிபி 1367 - கிபி 1517)*


ஜான் விக்லிப்

சீர்திருத்தலுக்கு முந்தைய காலப்பகுதியாக இருக்கிற சபையின் இந்த ஐந்தாம் காலப்பகுதியில், கர்த்தர் தேர்ந்தெடுத்த தம் “தூதன்” அல்லது நட்சத்திரம் இங்கிலாந்தின் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்திலிருந்த ஒரு ஆசிரியர்அவர் பெயர்

### *ஜான் வைக்லிப்*

இவர் நெஞ்சுரமிக்க சீர்திருத்தவாதியும்,முதன்முதலில் வேதத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வேதத்தின் சத்தியங்களை முறையாக உபதேசிக்கத் துவங்கினவருமாவார். இவருடைய பின்னடியார்களை லல்லார்ட்ஸ் (Lollards) என்று அழைக்கின்றனர். இது “Lollen (or) Lullen” என்ற ஜெர்மானிய வார்த்தையிலிருந்து வருகிறது. இதற்கு “மென்மையாகப் பாடுவது”என்று பொருளாகும்.இந்த வார்த்தையிலிருந்தே தாலாட்டுப் பாடல் என்று பொருள்படுகிற “Lullaby” என்ற ஆங்கில வார்த்தை வருகிறது.

வைக்லிபின் பின்னடியார்கள், தொடர்ச்சியாக மெல்லிய குரலில் பாடல்களைப் பாடிவருவதே இவ்வாறு அவர்கள் அழைக்கப்படக் காரணமாகும். இவர்களுடைய வருகையை சற்று தொலைவிலிருந்தே இந்த பாடல்களின் மூலம் உணரலாம். “ஜான் வைக்லிப்” ஏழை “பாதிரியார்கள்” என்ற வகுப்பாரை பயன்படுத்தி, இவர்கள் மூலம் சுவிசேஷ நற்செய்தியை பரப்பினார். சாதாரண ஜனங்கள் புரிந்துகொள்ளமுடியாத லத்தீன் மொழியில் புதைக்கப்பட்டிருந்த வேத வசனங்களை இவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, சாதாரண ஜனங்களின் கையில் கிடைக்கும்படி செய்தார்.

சத்தியத்தை பொது ஜனங்களுக்கு எடுத்துச்செல்ல, வெறும் பாதங்களோடு, மற்றவர்களுடைய உதவியிலும், எளிமையான உணவு முறையை கடைப்பிடித்து வாழ்ந்த இந்த ‘ஏழை பாதிரியார்களுக்கு”இவரே ஊதியமளித்து வந்தார்.

ஜான் வைக்லிப்பைக் குறித்துக் காண்கையில் -

- நுண்ணறிவு மிக்கவராக,
- தெளிவான சிந்தனையை உடைய

- சத்தியத்தை நிலைநாட்டுவதில் உறுதியுடைய
- சத்தியத்தைப் பாதுகாப்பதில் நெஞ்சுரமிக்கவராக இருந்தார்.

அவருடைய நாட்களில் அவருக்கு இணையானவர் இல்லாத மாபெரும் சீர்திருத்தவாதியாக இருந்தார். இதனிமித்தம் இவரை -"***சீர்திருத்தலின் விடிவெள்ளி***" என்று அழைக்கின்றனர்.

இவர் மரித்து நாற்பது வருடங்கள் கழித்து, போப்பு மார்க்கமானது அவருடைய கல்லறையை தோண்டியெடுத்து, எஞ்சியிருந்த எலும்புகளை பொதுமக்களின் பார்வையில் எரிக்குமளவுக்கு போப்பு மார்க்கம் இவரை வெறுத்தது. பின்பு அவருடைய சாம்பலை எடுத்து அருகிலிருந்த ஆற்றில் கரைத்தனர்.

இதைக் குறித்து வோர்ட்ஸ்வொர்த் என்ற கவிஞன் பின்வரும் கருத்தை எழுதினார் - ஆற்றில் கரைக்கப்பட்ட சாம்பல் கடலில் கலந்ததுபோல, ஜான் வைக்லிபின் போதனைகள் அவருடைய மரணத்திற்கு பின்பு உலகத்தில் கரைந்து அனைவரையும் சென்றடைந்தது என்று கூறுகிறார். ஜான் வைக்லிப் மேற்கொண்ட வேதத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு, பின்நாளில் அவரை பின்பற்றிய - வில்லியம் டின்டேல் என்பவரால் மேற்கொள்ளப்பட்டு நிறைவடைந்தது.

## *6. பிலதெல்பியா (கிபி 1517 - கிபி 1874)*


மார்டின் லூதர்

சபையின் ஆறாவது காலப்பகுதி மாபெரும் சீர்திருத்தலில் துவங்கியது. இக்காலப்பகுதிக்கான சத்திய வெளிச்சத்தை பிரகாசிக்கச்செய்ய கர்த்தர் தேர்ந்தெடுத்து பயன்படுத்தின "தூதன்" அல்லது "நட்சத்திரம்" 1517ம் வருடம் அக்டோபர் 31ம்தேதி ஜெர்மனியின் விட்டன்பெர்க்கில் துவங்கிய சீர்திருத்துதலுக்கு வழிவகுத்த **"மார்ட்டின் லூதர்"** ஆவார்

இவர் ஜெர்மனியில் இருந்த சேக்சோனியைச் சேர்ந்த ரோமன் கத்தோலிக்க பாதிரியாராவார். இவர் தன்னுடைய பாவங்களுக்காக தன்னை சுயமாக வருத்திக்கொண்டு, அனைத்து விதமான உபவாசங்களையும் கடைப்பிடித்தார். இவர் 1508ம் வருடம் விட்டன்பர்க்கு பல்கலைக்கழகத்தில் ஆசிரியராக பணியில் சேர்ந்தார். அப்பணியில் 1546ம் வருடம் அவரது மரணம் வரை நிலைத்திருந்தார். பின்பு இவர் 1511ம் வருடம் தன்னுடைய பாவங்களுக்கான மன்னிப்பைப்பெற ரோமாபுரிக்கு யாத்திரையாக சென்றார்.

அங்கு "ஸ்காலா சான்டா" என்றழைக்கப்படும் படிக்கட்டுக்களில் முழங்கால்களால் ஏறிக்கொண்டிருக்கும்போது, இவருடைய வாழ்க்கையை மாற்றி, மாபெரும் சீர்திருத்தலுக்கு வித்திட்ட அந்த வசனம் அவருடைய நினைவிற்கு வந்தது. அந்த வசனத்தை வாசிப்போம் -

**ரோமர் 1:17**

***"விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்றுஅந்தச் சுவிசேஷத்தினால்வெளிப்படுத்தப்படுகிறது"***

இந்த வசனம் நினைவுக்கு வந்ததும் , படிக்கட்டுக்களிலிருந்து இறங்கி, அவர் ரோமாபுரியைவிட்டு ஜெர்மனிக்கு திரும்பினார். அதற்கு பின்பு சில வருடங்கள்கழித்து - "தொன்னூற்று ஐந்து

கேள்விகள்” என்றழைக்கப்பட்டதை விட்டன்பர்க்கு தேவாலயத்தின் கதவுகளில் ஆணியடித்தார். இந்த “கேள்விகள்” அனைத்தும்பணத்தின் மூலம் பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற நம்பிக்கைக்கு எதிராக கேள்விகளை எழுப்பி விவாதித்தது.

இதற்குப் பின்பு, படிப்பறிவு உள்ளவர்களுக்கு லத்தீன் மொழியிலும், ஜெர்மானிய மொழியிலுமாக கைப்பிரதிகள் தொடர்ந்து வெளிவந்தன.

1520ம் வருடவாக்கில் மார்ட்டின் லூதர் ஜெர்மனியில் மிக பிரபலமாக இருந்தார். அதே வருடம் போப் தன்னுடைய அதிகாரத்தில் ஏற்படுத்தப்பட்ட “புல்“(Bull)என்ற கடிதத்தின் மூலம் லூத்தரை தடைசெய்து, அவரை வேத புரட்டராக கருதி,மரணத்திற்கு ஏதுவாக பயமுறுத்தினார்கள்.

ஆனால் 1520 டிசம்பர் 10ம் தேதி, “போப்பினுடைய அந்த கடிதத்தை” பொதுமக்களின் முன்னிலையில் சுட்டெரித்தார்.

இதற்குப் பின்பு போப்பு மார்க்கத்திற்கு எதிராகவும், ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் போதகத்திற்கு எதிராகவும் புராட்டஸ்டன்ட் இயக்கம் துவங்கியது.

இதன்பின், துறவியாக இருந்த மார்ட்டின் லூதர், ஒரு காலத்தில் கன்னியாஸ்திரீயாக இருந்த கேத்தரீன் வான்போரா என்பவரை திருமணம்செய்தார். இவர் மார்ட்டின் லூத்தருக்கு மிகப்பெரிய உதவியாக இருந்தார். இவர்களுடைய திருமணம் அநேக துறவிகள் மற்றும் கன்னியாஸ்திரீகள்பின்பற்றக்கூடிய முன்உதாரணமாகஅமைந்தது.

பின்னாளில் அநேக எதிர்ப்புக்கள் மற்றும் உபத்திரவங்களுக்கு மத்தியில் மார்ட்டின் லூத்தர் வேதத்தை ஜெர்மானிய மொழியில் மொழிபெயர்த்தார்.

ஒருவகையில், இது அவருடைய விலைமதிப்பற்ற வேலையாக அமைந்தது.உண்மையில் இவர் அசாதாரணமான திறமைகளைப் பெற்ற அபூர்வமான மேதையாக இருந்தார். அவருடைய விசேஷகுணநலன்களை நாம் கவனிக்கையில், அவர் -

வேத வசனங்கள் மற்றும் மற்றஉண்மைகளை அச்சு பிசகாமல் தன்னுடைய ஞாபகத்தில் பெற்றிருந்து

கர்த்தருடைய ஊழியத்தில் தான் மேற்கொண்ட எல்லா முயற்சிகளிலும்

- ஸ்திரத்தன்மை உள்ளவராக
- தேவனுடைய வார்த்தையாகிய சத்தியத்தை வெளிப்படுத்துவதில் விசேஷித்த வாய்மொழி திறமை உள்ளவரும்,
- மனித பலவீனங்களுக்கு அப்பார்ப்பட்ட பரந்த உள்ளம் உடையவராக இருந்தார்.

உண்மையில் இவர் கர்த்தர் தேர்ந்தெடுத்த- சீர்திருத்தலின் தந்தையாக இருந்தார்.

## *7. லவோதிக்கேயா*
## *(கிபி 1874 - சபையின் நிறைவுவரை)*



C.T.ரஸ்ஸல்

சபையின் இந்த ஏழாவது காலப்பகுதி திரும்பியிருக்கும் இயேசுஇராஜாவின் பிரசன்னத்தின்போது இருப்பதால் இது மிகவும் விசேஷமான காலப்பகுதியாகும்.

எனவே சத்திய வெளிச்சத்தை பிரகாசிக்கச்செய்யும் கர்த்தரது வலது கரத்தில் இருக்கிற இந்த தூதன்(நட்சத்திரம்) மிகவும் விசேஷமானவராக இருக்கவேண்டும். இவரைக் குறித்து வசனங்களில் வாசிக்கிறோம் -

**மத்தேயு 24:45**

***"ஏற்றவேளையிலே தன் வேலைக்காரருக்குப்போஜனங்கொடுத்து அவர்களை விசாரிக்கும்படி எஜமான் வைத்த உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரன் யாவன்" இந்த உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரனைக் குறித்து வாசிக்கையில் -***

**மத்தேயு 24:46,47**

***"எஜமான் வரும்போது அப்படிச் செய்கிறவனாகக் காணப்படுகிற ஊழியக்காரனே பாக்கியவான். தன் ஆஸ்திகள் எல்லாவற்றின்மேலும் அவனை விசாரணைக்காரனாக வைப்பானென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்"***

கர்த்தருடைய வருகை 1874ம்ஆண்டு நிறைவேறியபின்பு, அவர் ஏற்படுத்தின அந்த ஊழியக்காரன் - சார்லஸ் தேசே ரஸ்ஸல்

இவர் 1852ம் ஆண்டு பிப்பரவரி 16ம்தேதி பிறந்தார். மேலும் தன்னுடைய 15ம் வயதில் கிறிஸ்தவ மண்டலத்தின் விசுவாசக் கொள்கைகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டு, பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டிருந்ததை கண்டார். மேலும் நித்திய வேதனை ஸ்தலமாகிய "நரகம்" பற்றின போதனை அவரை பெரியஅளவில் பாதித்தது. இதன்மூலம் அவர் நம்பிக்கையற்றவராக மாற நேர்ந்தது.

மற்ற மதங்களில் இதற்கான பதிலை தேடி மேலும் அதிருப்தியடைந்தவராகக் காணப்பட்டார். இறுதியில், திணிக்கப்பட்ட கருத்துக்களிலிருந்து விடுபட்டவராக, திறந்தமனதுடன் வேதத்தை மீண்டும் அவர் தேடிப் பார்த்தபோது, அவரது பிரயாசங்களை தேவன் ஆசீர்வதித்து, மனிதனுக்குரிய தேவனுடைய மாபெரும் தெய்வீகத் திட்டத்தைக் குறித்து பிரகாசமான மனக்கண்களைப் பெற்றார்.

லவோதிக்கேயா என்ற ஏழாவது சபையின் இந்தத் தூதன் மூலம் ஆபகூக் 2:2ல் உரைத்த தேவனுடைய வார்த்தைகள் நிறைவேறின -

**ஆபகூக் 2:2**

***"அப்பொழுது கர்த்தர் எனக்குப் பிரதியுத்தரமாக, நீ தரிசனத்தை எழுதி அதைக் கடந்தோடுகிறவன் வாசிக்கும்படி பலகைகளிலே தீர்க்கமாக வரை"***

ஆம். இந்த தரிசனத்தை வரைந்தவர் சார்லஸ் தேசே ரஸ்ஸல் அவர்களே. இவரே ஏதேன் முதல் பரலோக இராஜ்யம் வரையிலான தேவனுடைய தெய்வீக திட்டத்தை முதன்முதலில் தெளிவாகப் புரிந்தவர் ஆவார்.

மேலும் "வேத வசனங்களின் மீதான ஆராய்ச்சி"(Studies in the scriptures) என்ற ஆறு தொகுப்புக்களை எழுதி அதன்மூலம் தீர்க்கமாக சத்தியங்களை வெளிப்படுத்தினார். அதோடுகூட "ஆசரிப்புக்கூடாரத்தின் நிழல்கள்" என்ற சிறிய புத்தகத்தையும் எழுதினார். அவருடைய ஊழியம் பெரும்பாலும் எழுத்துவேலை நிறைந்ததாக இருந்தது. நாம் அவரைப்பற்றி வேதத்தில் எசேக்கியேல் புத்தகத்தில் சொல்லப்பட்டுள்ள தீர்க்கதரிசனத்தில் காணலாம் -

**எசேக்கியேல் 9:3**

***"ஆலயத்தின் வாசற்படியிலே வந்து, சணல் நூல் அங்கி தரித்து, தன் அரையிலே கணக்கனுடைய மைக்கூட்டை வைத்திருக்கிற புருஷனைக் கூப்பிட்டு"***

இது ஏழாவது சபையின் 'தூதன்" - சார்லஸ் தேசே ரசல் அவர்களை நேரடியாக குறிக்கிற

வசனமாகும். இங்கு சொல்லப்பட்ட விபரங்கள் அனைத்தும், கிறிஸ்தவ சபையின் வரலாற்றில், வேத வசனங்கள் அனைத்தையும் குறித்து விளக்க அதிகமான பக்கங்களை எழுதினவருக்கு மிகச் சரியாகப் பொருந்துகிறது.

இவர் கிட்டத்தட்ட50000 பக்கங்களை 1879முதல் 1916 ம் ஆண்டு வரை கிட்டத்தட்ட 37 வருடங்களில், சராசரியாக ஒரு நாளைக்கு 4 பக்கங்கள் வீதம் எழுதியுள்ளார்.

சார்லஸ் தேசே ரசல் தன் தந்தையோடு வியாபார ஸ்தாபனங்களை நிர்வகித்து தன் 21ம் வயதில் கிட்டத்தட்ட 2,50,000 டாலர்கள் மதிப்புள்ள சொத்துக்கு சொந்தக்காரராக இருந்தார். ஆனால் 3 வருடங்களுக்குப் பிறகு 1876ம் வருடம் அவருடைய 24ம் வயதில் கர்த்தருடைய பிரசன்னம்(பரோஷியா) 1874ம் ஆண்டு துவங்கியிருப்பதை குறிப்பிடுகிற காலத்தீர்க்கதரிசன வசனங்களைப் பற்றி உணர்வுக்கு வந்தார். அதன்மூலம், இது அறுவடைக்கான விசேஷகாலம் என்பதை அவர் உணர்ந்தார்.

இந்த சூழ்நிலையில்.. தன் வியாபார நோக்கங்களை தொடர்வதா? அல்லது தன் முழு நேரத்தையும் கர்த்தருடைய ஊழியத்தில் அறுவடை வேலைக்கு அர்ப்பணிப்பதா? எனறு தீர்மானிக்கவேண்டியது அவசியமாயிற்று. ஒருவேளை, தன்னுடைய வியாபாரத்தை தொடர்ந்திருந்தால், அவருடைய நாட்களில் மிகப்பெரிய பணக்காரர்களில் ஒருவரான ஜான் டி ராக்பெல்லர் என்பவரைக் காட்டிலும் செல்வந்தராகியிருக்கக்கூடும்.

ஆனால் ரசல் தன்னுடைய வியாபாரத்தைவிட்டுவிட்டு, முழுநேர ஊழியராக கர்த்தருடைய ஊழியத்தில் பிரவேசிக்க 1877ம் ஆண்டு முடிவுசெய்தார். இவ்வாறு தீர்மானம் எடுத்தபோது அவரது சொத்துமதிப்பு 3,50,000 டாலர்களாக இருந்தது. அதை அவர் கர்த்தருடைய ஊழியத்திற்கு முழுமையாக அர்ப்பணித்தார். இவ்விதமாக கிட்டத்தட்ட 42 வருடங்கள் அயராது வேலைசெய்து, கிட்டத்தட்ட ஒரு மில்லியன் மைல்களுக்கும் மேலாக பிரயாணம் செய்தார். ..கிட்டத்தட்ட 30,000 தொகுப்புரைகளை வழங்கியுள்ளார்.

அது மாத்திரமல்ல, அவர் தனியாக **சியோன்ஸ் வாட்ச் டவர் அன்டு ஹெரால்டு ஆப் கிரைஸ்ட் பிரசன்ஸ்** (Zion's Watch Tower and Christ's Presence) என்ற மாதப் பத்திரிக்கையை ஆரம்பித்து, அதற்குரிய கட்டுரைகளை தாமே எழுதிவந்தார். மேலும், அவர் தினசரி பத்திரிக்கைகளுக்கும் கட்டுரைகளை எழுதினார். சில சமயங்களில் அவருடைய கட்டுரைகள் ஒரே சமயத்தில் இரண்டாயிரம் பத்திரிக்கைகளில் வெளியானது. இது வாரந்தோறும் 15 முதல் 20 மில்லியன் ஜனங்களை சென்றடைந்தது. அவர் செய்த வேலைகளில் மிகப் பெரியதாக,
**'தி போட்டோ டிராமா ஆப் கிரியேஷன்"**(The Photo drama of Creation) அமைந்தது. இது உலக மனுக்குலத்தின் வரலாற்றை புகைப்படமாக காண்பிக்க எடுக்கப்பட்ட முயற்சியாகும். இதில் கிட்டத்தட்ட நூற்றுக்கும் மேலான வரைபடங்கள் இடம்பெற்றிருந்தது. இதன் மொத்த செலவு கிட்டத்தட்ட ஒரு மில்லியன் டாலரைத் தொட்டது. இதை அவர் ஐரோப்பா மற்றும் அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற இடங்களில் , கிட்டத்தட்ட நாலாயிரத்திற்கும் மேலான காட்சிகளில் காண்பித்தார்.

ஆம் உண்மையில், சார்லஸ் தேசே ரசல் அவர்களே அந்த

***"உண்மையும் விவேகமும் உள்ள ஊழியக்காரனாகவும்.."***
***அதேசமயம், எஜமான் தன் ஆஸ்திகள் எல்லாவற்றின்மேலும் அதிகாரியாக வைத்த***

*விசாரணைக்காரன்" ஆவார்*

சார்லஸ் தேசே ரசல் அவருடைய போதனைகளை பின்பற்றுகிறவர்கள் வேதமாணவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். இவர் மரியா என்பவரை மணந்தார். ஆனால் இவர் ரசல் அவர்களை நியாயமில்லாத காரணங்களுக்காக பிரிந்தார். பின்நாளில் ரசலுடைய மரணத்திற்குப் பின்பு தன் தவறுகளுக்காக மனம் வருந்தினார்.

சார்லஸ் தேசே ரசல் - 1916ம் வருடம் அக்டோபர் 31ம்தேதி ஒரு கூட்டத்தை முடித்துக்கொண்டு ரயிலில் திரும்பும்போது. மரித்தார்.அப்பொழுது அவரிடம் வெறும் சில டாலர்களே மீதமிருந்தது.

நாம் பார்த்த இவர்கள் 7பேரும் கர்த்தருடைய 'வலது கரத்தில் இருந்த ஏழு நட்சத்திரங்கள்.."ஆவர்.
உண்மையில் இயேசுகிறிஸ்துவின் சபையின் ஏழு காலப்பகுதிகளுக்கும் சத்திய வெளிச்சத்தை பிரகாசிக்க கர்த்தர் பயன்படுத்தின தூதர்கள் இவர்களே.

சபையின் ஏழு காலப் பிரிவுகளையும், அதற்கான தூதர்களையும் பற்றி அறிந்துகொண்ட நாம், இதை ஆதரிக்கும் தீர்க்கதரிசனம் சகரியா 4ம் அதிகாரத்தில் கூறப்பட்டிருப்பதை காண்போம்-

**சகரியா 4:1-14**

***"..இதோ முழுவதும் பொன்னினால் செய்யப்பட்ட குத்துவிளக்கைக் காண்கிறேன். அதின் உச்சியில் அதின் கிண்ணமும் அதின்மேல் அதின் ஏழு அகல்களும், அதின் உச்சியில் இருக்கிற அகல்களுக்குப் போகிற ஏழு குழாய்களும் இருக்கிறது. அதின் அருகில் கிண்ணத்திற்கு வலது புறமாக ஒன்றும், அதற்கு இடதுபுறமாக ஒன்றும், ஆக இரண்டு ஒலிவ மரங்கள் இருக்கிறது என்றேன்....இந்த இரண்டு ஒலிவமரங்கள் என்னவென்று கேட்டேன். மறுபடியும் நான் அவரை நோக்கி ... இரண்டு பொற்குழாய்களின் வழியாய்த் தொங்கி, பொன்னிறமான எண்ணெயைத் தங்களிலிருந்து இறங்கப் பண்ணுகிறவைகளாகிய ஒலிவ மரங்களின் இரண்டு கிளைகள் என்னவென்று கேட்டேன்.அதற்கு அவர்.. இவைகள் இரண்டும் சர்வலோகத்துக்கும் ஆண்டவராயிருக்கிறவரின் சமுகத்தில் நிற்கிற அபிஷேகம் பெற்றவர்கள் என்றார்"***


Candlestick of Zechariah 4

இது சகரியாதீர்க்கதரிசி கண்ட தரிசனமாகும். இது எதைக் குறிக்கிறது? இது சற்றுமுன்னர் பார்த்த இயேசுகிறிஸ்துவின் சபை மற்றும் அதன் ஏழு காலப்பிரிவுகளும், அவைகளுக்கான ஏழு தூதர்களையும் பற்றினதாகும். இங்கு நாம் கண்ட குத்துவிளக்கு மற்றும் அதன் ஏழு அகல்கள் மற்றும் ஏழு கிளைகளும் வெளிப்படுத்தல் 1:12 , யாத்திராகமம் 25:3 இலும் கூறப்பட்டுள்ளதைக் காண்க.

***"ஏழு கிளைகளை உடைய பொன் குத்துவிளக்கு"*** -
இயேசுகிறிஸ்துவின் சபை மற்றும் 7 காலப்பிரிவுகள்

***"ஏழு குத்துவிளக்குகளும் அதன் ஏழு அகல்களும்"*** -
பொன்னிறமான எண்ணையை இரண்டு ஒலிவ மரங்களிலிருந்து, இரண்டு பொன்னினாலான குழாய்களின் வழியாய் கிண்ணத்தில்

பெற்று, அந்த கிண்ணத்திலிருந்து "பொன்னினாலான ஏழு குழாய்களின் மூலம்" அந்த ஏழு அகல்களுக்கு செல்கிறது. இவை எதைக் குறிக்கின்றன?

இவையனைத்தும் ஒட்டுமொத்தமாக, இந்த சுவிசேஷயுகத்தில் , சபைக்கான தேவனுடைய தெய்வீக வழிநடத்துதலை குறிக்கிறது.

"***ஏழு குத்துவிளக்குகள்***" - பெந்தெகொஸ்தே நாள் துவங்கி அது நிறைவாகும் வரையிலான இயேசுகிறிஸ்துவின் சபையின் ஏழு காலப்பகுதிகளைக் குறிக்கிறது.

"***பொன்னினாலான ஏழு குழாய்கள்***" - ஏழு காலப்பகுதிகளுக்கும் கர்த்தரால் விசேஷமாக நியமிக்கப்பட்ட ஏழு 'தூதர்களை" குறிக்கும்.

இவர்கள்வழியாகவே அந்த காலகட்டங்களில் சபைக்கு தேவனுடைய வார்த்தையின் சத்திய வெளிச்சம் பகிர்ந்தளிக்கப்பட்டது.

"***கிண்ணம்***" - இது சபையின் தலைவராக கர்த்தர் இயேசு நியமிக்கப்பட்டிருப்பதை குறிக்கிறது(எபேசி 1:22). இவர் மூலமாகவே புது சிருஷ்டிகள் ஆவிக்குரிய ஜீவனைப் பெற்றுக்கொள்கிறார்கள்(யோவான் 15:5). இது பின்வரும் வசனத்திலும் அருமையாக விளக்கப்பட்டிருக்கிறது -

***வெளிப்படுத்தல் 1:13***

***"அந்த ஏழு குத்துவிளக்குகளின் மத்தியிலே, நிலையங்கி தரித்து, மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த மனுஷகுமாரனுக்கொப்பானவரையும் கண்டேன்"***

இங்கு தலையாகிய கிறிஸ்து, சபை மீது வைத்துள்ள கண்காணிப்பை காட்சியாக காண்கிறோம்.

"***இரண்டு ஒலிவ மரங்கள்***" - எதைக்குறிக்கிறது? பின்வரும் வசனத்தில் காணலாம் -

***வெளிப்படுத்தல் 11:3,4***

***"என்னுடைய இரண்டு சாட்சிகளும் இரண்டு வஸ்திரமுடுத்திக் கொண்டிருக்கிறவர்களாய்...பூலோகத்தின் ஆண்டவருக்கு முன்பாக நிற்கிற இரண்டு ஒலிவ மரங்களும் இரண்டு விளக்குத்தண்டுகளும் இவர்களே"***

***நாம் காண்கிற "இரண்டு ஒலிவ மரங்கள்"*** - வெளிப்படுத்தல் 11ம் அதிகாரத்தில் 'இரண்டு சாட்சிகள்" என்றழைக்கப்படுகிறது. மேலும் இவைகளின் அடையாளத்தைக் குறித்து

***சகரியா 4:13,14***

***"அந்த இரண்டு ஒலிவ மரங்களும் இரண்டு அபிஷேகம் பெற்றவர்கள்"***

என்று குறிப்பிடப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

எனவே "இரண்டு சாட்சிகள்" என்றும், "இரண்டு அபிஷேகம் பெற்றவர்கள்" என்றும் குறிப்பிடப்படுகிற இந்த 'இரண்டு ஒலிவமரங்களும்" - தேவனுடைய பரிசுத்த வார்த்தைகளாகிய சாட்சிகளைக் குறிக்கிறது. அவை இரண்டு பாகங்களாக, 'புதிய ஏற்பாடு" மற்றும் பழைய ஏற்பாட்டிலும் உள்ளது.

"***பொன்னிறமான எண்ணை***" - இது தெய்வீக ஆசீர்வாதமாகிய தேவனுடைய சத்தியத்தின் பரிசுத்தஆவியைக் குறிக்கிறது.இது தேவனும் பிதாவுமானவரிடமிருந்து வருவதைக் காண்கிறோம்-

**யோவான் 14:16,17**

***"நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன். அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது. அவர் உங்களுடனே வாசம்பண்ணி, உங்களுக்குள்ளே இருப்பதால் நீங்கள் அவரை அறிவீர்கள்"***

பிதாவிடமிருந்து பெறப்படும் பரிசுத்தஆவியானது இங்கு 'பொன்னிறமான எண்ணையாக" அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

"***இரண்டு பொன்னினாலான குழாய்கள்***" - தேவன் தம் வார்த்தையின் மூலம் பரிசுத்தஆவியை பகிர்ந்தளிக்கும் வழியைக் குறிக்கிறது.

**குழாய் - 1** இது பழைய ஏற்பாட்டில் தேவன் தம் சத்தியத்தை வெளிப்படுத்தும் முறைகளாகிய - தீர்க்கதரிசனங்கள், அடையாளங்கள் மற்றும் நிழல்களைக் குறிக்கிறது

**குழாய் -2** இது புதியஏற்பாட்டில் தேவன் தம் சத்தியத்தை வெளிப்படுத்தும் வழிமுறையாகிய , வாக்குத்தத்தங்கள், ஊக்கப்படுத்தும் வார்த்தைகள் மற்றும் இரட்சிப்பின் திட்டத்தின் பல்வேறு அம்சங்களை விளக்கும் விளக்கப்பகுதிகளைக் குறிக்கிறது.

இந்த தரிசனத்தின் மூலம்சுவிசேஷயுகத்தில் சபையையும், அதற்கான தெய்வீக வழிநடத்துதலையும் காண்கிறோம். அவையனைத்தும் ஜீவனுள்ள வார்த்தையாகிய- சபையின் தலையாகிய - இயேசுகிறிஸ்து மூலமாகவும் அளிக்கப்படுவதைக் காண்கிறோம்.
இவ்விதமாக சபையின் சரித்திரத்தை விரிவாக நாம் இன்று அறிந்துகொண்டோம். மேலும் சகரியா புத்தகத்தின் தீர்க்கதரிசனப் பகுதியின்மூலமும் நிரூபித்திருக்கிறோம்.

**தேவன் தாமே நம் அனைவரையும் தம் சத்தியப்பாதையில் வழிநடக்க நமக்கு துணைபுரிவாராக, ஆமென்.**

**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**
For Further Details Please Contact:
bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky
+919443321874 https://www.facebook.com/bibleresearch/